

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක **: 492**

උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

**பாராளுமன்றக் கூட்டத்தொடர் இல.: 492**

**மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்**

**Parliamentary Series No. – 492**

# Judges of the Superior Courts

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 492

ආයතනයේ නම :- උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු - ශීර්ෂ අංක 04

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் - தலைப்பு இல: 04

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 492

Name of the institution: Judges of the Superior Courts-Head No:04

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்றத் தொடர் இல. - 492

நிறுவனத்தின் பெயர் - மீயுயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள்

நிதியாண்டு2023 – பகுதி 1

| | குழுவினால் அடையாணங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்திக்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடடிவடிக்கை/தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட முறைமையில் பேணப்பட்டிருக்கவில்லை | 2026க ஆண்டு முதல் இதனை பேணுவதற்கான நடடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| 02 | அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை | தொடர்புடைய ஆவணம் தற்போது இற்றைப்படுத்தப்பட்டுள்ளது |
| 03 | அனைத்து வாகனங்கள் தொடர்பான சம்பவத்திரட்டுப் புத்தகம் முறையாக பேணப்படவில்லை என்பதுடன் இற்றைப்படுத்தப்படவுமில்லை | கௌரவ நீதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் இரகசியம்பேணல் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளினால் பயன்படுத்தப்படும் உத்தியோகப்பூர்வ வாகனங்களுக்கு சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்படுவதில்லை. |
| 04 | அரசாங்கத்திற்கு சொந்தமன வாகனங்களுக்கு விபத்து நேரிடும்போது நிதி ஒழுங்குபடுத்தலின்கீழான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2026 ஆம் ஆண்டு முதலாக, அனைத்து வாகன விபத்துகளும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க விசாரணக்கு உட்படுத்தப்படவுள்ளன. |
| 05 | ஒரு வாரத்திற்குள்ளான தற்காலிக உபபணி முற்பணம் தொடர்பில் நிதி ஒழுங்குபடுத்தலின் 371 ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதி ஒழுங்குபடுத்தலின் 371 ஆம் பிரிவிற்கிணங்க தற்காலிக உபபணி முற்பணத்தைத் தீர்ப்பதற்கு தேவையான நடடிவக்கைகள் ஏலவே எடுக்கப்பட்டுள்ளன. |
| 06 | பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைகளின்கீழ் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது 08.-8.2024 அன்று பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 07 | நிதி ஒழுங்குபடுத்தல் ஏற்பாடு 134(2) இன்கீழான நியதிகளின் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் தலைமைக்கான உள்ளக கணக்காய்வு அலகொன்று காணப்படாமையினால் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள 09.02.2026 அன்று நிதிசார் ஒழுங்குபடுத்தல் படிவம் 71 நீதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 08 | தேவைப்படுத்தப்படுகின்றாவறு. மீளாய்வின்கீழான ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலகொன்று இல்லாமையினால், உள்ளக முகாமைத்துவ கணக்காய்வு குழு கூட்டங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், 2026 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

15.../ 05/2026 அன்று
இலங்கை உயர்நீதிமன்றில்

(Translation)

பதிவாளர்
உயர் நீதிமன்றம்

මනෝදි ජේවාවසම්
ශ්‍රේෂ්ඨාධිකරණයේ රෙජිස්ට්‍රාර්/
කොළඹ අතිරේක මහේස්ත්‍රාත්

பாராளுமன்றத் தொடர் இல. - 492
நிறுவனத்தின் பெயர் - மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்
நிதியாண்டு 2023 – பகுதி 2

| | குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை தீர்க்க நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடடிவக்கைகள்/தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/1028 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளை பேணி வரையப்பெற்ற மனித வள திட்டம் காணப்பெறவில்லை | 2023 ஆண்டுக்கான மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவில்லை; எனினும், 2026 ஆண்டுக்கான மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 02 | தயாரிக்கப்பட்டுள்ள மனித வள அபிவிருத்தித் திட்டம் 50% இற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு குறைந்தபட்சமாக 12 மணித்தியால வருடாந்த பயிற்சியையேனும் உறுதிப்படுத்தவில்லை | கௌரவ பிரதம நீதியரசர் உள்ளிட்ட மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை, 2023 ஆண்டுக்கான வெளிநாட்டு பயிற்சி வாய்ப்பு ஒதுக்கீடுகள் போதுமற்றதாக காணப்பட்டமையினால் உள்ளூரில் நடாத்தப்படமுடியாதிருந்தது. |
| 03 | ஒட்டுமொத்தப் பணியாளர்களையும் உள்ளடக்கும் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் வரையப்பெறவோ அல்லது உள்ளிடப்படவோ இல்லை | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு செயலாற்றுகை ஒப்பந்தங்களை தயாரிக்கப்படுவதில்லை |
| 04 | மனித வள அபிவிருத்தி திட்டமிடல்களை தயாரிக்கவும் மற்றும் தகவு மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது, கௌரவ மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 05 | நிறுவனம் அதனது விரிவெல்லைக்கு செல்லுபடியான நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடையாளங்காண தவறியுள்ளது. | இவ்விடயங்கள் 2023 ஆண்டளவில் அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை எனினும் நிறுவனத்துடன் தொடர்புடைய நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தற்போது அடையாளங்காணப்பட்டுள்ளன.<br><br>அதன்பிரகாரம், நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 8, 9, மற்றும் 10 ஆகியவற்றுக்கான விசேட கவனத்துடன் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br><br>கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக:<br>டிஜிட்டல்மயப்படுத்தல்; உயர் நீதிமன்றத்தினை அதனது தொழிநுட்ப திறன்களை வளப்படுத்துவதனூடு |
| 06 | அடையாளங்காணப்பட்ட நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலக்குகள் தீர்மானிக்கப்படவிலைலை. | |
| 07 | நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளது நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை அளவிடும் குறிகாட்டிகள் கட்டமைக்கப்பட்டிருக்கவில்லை | |

| | | |
|---|---|---|
| | | முழுமையாக டிஜிட்டல்மயப்படுத்துவதற்கு அத்தியாவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்; அமைதி மற்றும் சமாதானத்தினை உறுதிப்படுத்தும் அதேசமயம் தேசிய மற்றும் சர்வதேசிய மட்டங்களில் சட்டவாட்சியை மேம்படுத்தல்; மற்றும் அனைவருக்கும் நீதிக்கான அணுகலை உறுதிப்படுத்தும் அதேசமயம் சட்டம் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்ததான அனைத்து அத்தியாவசிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன என அறியத்தரப்படுகின்றது. அதன்பிரகாரம், உயர் நீதிமன்றத்தினை எதிர்காலத்தில் சூழல் நேய மற்றும் காகிதமற்ற நிறுவனமொன்றாக மாற்றுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 08 | திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில், வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் 50% இற்கும் குறைவாகக் காணப்பட்டன. | கௌரவ பிரதம நீதியரசர் உள்ளிட்ட மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், 2023 ஆண்டுக்கான வெளிநாட்டு பயிற்சி வாய்ப்பு ஒதுக்கீடுகள் போதுமற்றதாக காணப்பட்டமையினால் உள்ளூரில் நடாத்தப்பட முடியாதிருநத்து. |
| 09 | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குறித்துக்காட்டபட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தபட்டிருக்கவில்லை | சமரப்பிக்கப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்புடைய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது, அத்துடன் சாத்தியமான பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. |
| 10 | 28.08.2020 ஆந்திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் 12.1 ஆம் பந்திக்கிணங்க, அதனது பணிகளை தெளிவானதாக்குமாறு, நிறுவன செயற்பாடுகளது செயலாற்றுகை முன்னேற்றத்தினை அளவிடத்தக்க மூன்று செயலாற்றுகை குறிகாட்டிகளை நிறுவனம் அடையாளங்கண்டிருக்கவில்லை. | தொடர்புடைய குறிகாட்டிகள் 2023 ஆம் ஆண்டிற்காக அடையாளங்காணப்பட்டிருக்கப்படாவிட்டாலும், அவை 2026 ஆம் ஆண்டிற்கு அடையாளங்காணப்பட்டுள்ளன. |
| 11 | அதிகபட்ச சேவைக்காலத்தினை பூர்த்திசெய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் தொடர்பில் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. |

15../ 05/2026

உயர் நீதிமன்றத்தில்

Translation

Mandh

பதிவாளர்

உயர் நீதிமன்றம்.

මනෝඳි සේවාවසම්
ශ්‍රේෂ්ඨාධිකරණයේ රෙජිස්ට්‍රාර්/
කොළඹ අතිරේක මහේස්ත්‍රාත්